1971 ஜூன் 22]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது சொன்னார்கள், வடார்க்காடு மாவட்டத்தில், இராணிப்பேட்டையிலே வாங்கப்பட்டுள்ள இடத்தில் தொழிற் பேட்டைகள் அமைக்க தனி நபர்களோடு மாவட்ட ஆட்சித் தலைவர் பேசி வருகிறார்கள் என்று. ஆனால் வடார்க்காடு மாவட்டத்தில் பெரிய மூலதனத்தையுடைய பெரிய தொழில் அதிபர்கள் இல்லாததால் அரசாங்கமே பங்கேற்று, ஏறத்தாழ 800 ஏக்கர் அளவிற்கு இருக்கும் அந்த இடத்தில் பெரிய தொழிற் சாலை அமைக்க முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வடார்க்காடு மாவட்டத்திலேதான் ஏற்றுமதியாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, அங்கேயிருப்பவர்கள் தொழில் ஆரம்பிக்கத் தகுதியற்றவர்கள் என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராகயில்லை. ஏராளமான தகுதி படைத்தவர்கள் இருப்பார்கள். அவர்களை முன்வரச் செய்வது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கடமை என்று கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியில் கந்தகம் இருப்பதாக இப்பொழுது ஆராய்ச்சி நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட வேலைகள் நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது. அது எந்த அளவில் இருக்கிறது? இந்த அரசாங்கமே மேற்கொண்டு எடுத்து நடத்த முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்வி தொழிற் பேட்டைகளைப் பற்றியது. கனிப்பொருள்களைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தெரிவிக்கிறேன்.

வெளி நாட்டுக் கொள்கைகள் பற்றி மாநில அரசுகளின் கருத்துக்கள்.

* 16 வினா.—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மத்திய அரசு வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கும் போது மாநில அரசைக் கலந்தே செய்ய வேண்டும் என்ற கருத்தை நமது முதல்வர் அவர்கள் அண்மையில் மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை, ஐயா.

திரு. கே. எ. வகாப் : இந்திய உப கண்டத்தில் பொதுவான பிரச்னைகள் வரும்போது, அதாவது நம் நாட்டின் மீது சீனாக் காரர்களோ அல்லது பாகிஸ்தான்காரர்களோ படையெடுத்து வரும்போது தேசிய ஒருமைப்பாடு என்ற அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்று கூடிப் பாடுபடுவதற்காக மத்திய அரசு நம்மை அழைக்கிறது. ஆகவே, பொதுவான பிரச்னைகளில் நாம்

மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுவதற்குந் தகுதி படைத்திருக்கிறோம் என்பதன் அடிப்படையில் நாம் அந்த உரிமைகளை வற்புறுத்திக் கேட்க வேண்டும். குறைந்தபட்சம், அதாவது எமர்ஜன்ஸி ஏற்படுகின்ற நேரத்தில் தெற்குப் பகுதியில் உள்ள படைத்தளத்தைத் தலைமை தாங்கி நடத்துகிற பொறுப்பையாவது மத்திய அரசிடம் வற்புறுத்தி அத்தகைய வாய்ப்பினை நமக்கு ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசு வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கின்ற நேரத்தில் மாநில அரசுகளைக் கலந்து கொள்ள வேண்டும் என்ற அந்தக் கருத்தில் நாம் இப்போது எதையும் ஆராயத் தேவையில்லை. ஏனென்றால் மத்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளை மாநில அரசுகள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதுதான் இன்றைய அரசை அமைத்திருக்கிற ஆளும் கட்சியின் கருத்தாகப் பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. அன்மையில் நான் மேலவையில் பேசுகிற நேரத்தில் கூட இப்போது ஏற்பட்டுள்ள கிழக்குப் பாகிஸ்தான் தகராறில் இந்தியாவுக்குப் பாதகங்கள் ஏற்படுகிற நிலைமையில் பல சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதால் எதிர்கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்து ஆலோசிப்பதுபோல் மாநில முதல் அமைச்சர்களையும் இந்த நெருக்கடியான நிலையில் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கலந்து ஆலோசித்திருந்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தினைத்தான் வெளியிட்டேன். வெளிநாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் மாநில முதல் அமைச்சர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்ற அளவில் அதைச் சொல்லவில்லை. வெளிநாட்டுத் தொடர்பு பற்றி, மத்திய மாநில உறவுகள் பற்றிய விசாரணைக் குழுவின் பரிந்துரையில் கூட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகளில் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களைப் பாதிக்கக்கூடிய முடிவு ஒன்றை மத்திய அரசு எடுப்பதற்கு முன் அதுகுறித்து 'இன்டர் ஸ்டேட் கவுன்ஸிலில்' கலந்திடவேண்டும் என்றும் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு போன்ற விஷயங்களில் இதிலிருந்து விலக்கு அளிக்கப்படலாம் என்றும். ஆனால் இதுபற்றி எடுத்த முடிவுகளை மத்திய அரசு இன்டர் ஸ்டேட் கவுன்ஸிலுக்கு முன் தாமதமின்றி அதன் பார்வைக்கு வைத்திடவேண்டுமென்ற அளவில்தான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தப் பரிந்துரையில் கூறியுள்ளது மாதிரியாக, சென்ற காலங்களில் எல்லாம் சிலோன், பர்மா, மலேசியா போன்ற இடங்களில் தமிழ் மக்கள் பாதிக்கப் படக்கூடிய சமயங்களில் எல்லாம் தமிழக முதல் அமைச்சர் அவர்களையும், தமிழகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அன்று பிரதம மந்திரி அவர்கள் கலந்து கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் தமிழகத்தைச் சேர்ந்தவர் கமிஷனராகப் போக வேண்டும் என்ற

1971 ஜூன் 22]

சிபார்சைக் கூட நாம் செய்திருக்கிறோம். ஆகவே அம்மாதிரியான நிலையில் மத்திய அரசு தமிழக அரசின் முதல் அமைச்சர் அவர்களைக் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையைக் கொடுத்தார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொல்கிற அதே கருத்தின் அடிப்படையில்தான் நான் மேலவையில் பேசுகிற நேரத்தில் கருத்து தெரிவித்தேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல கோடித் தமிழர்களின் பிரச்சனை வெளிநாட்டுக் கொள்கையோடு பிணைந்திருப்பதால் இனிமேலாவது நாஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டம் போன்ற மற்றக் கூட்டங்களில் கலந்து கொள்ள மாநில முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போகும்போது கட்டாயமாக தமிழக முதல் அமைச்சர் அவர்களைக் கலந்து பேசவேண்டுமென்று வற்புறுத்துவார்களா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வற்புறுத்துவேன். நான் வற்புறுத்துகிற நேரத்தில் இவரை ஏன் கலந்து கொள்ள வேண்டுமென்று உங்கள் தரப்பிலிருந்து சொல்லாமல் இருந்தால் அதுவே எனக்குத் தக்கப் பாதுகாப்பாக இருக்கும்.

Statue of Gandhiji at Salem

* 17 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Hon. Chief Minister has received a petition from 15th ward Gandhiji Centenary Celebration Committee, Salem for permission to erect the statue of Gandhiji; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சேலம், 15-ஆவது தொகுதியைச் சேர்ந்த காந்தியடிகள் நூற்றாண்டு விழாக்குழு, காந்தியடிகள் சிலையொன்றை நிறுவ அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அது தற்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதற்கான அனுமதி, 15—3—1971 லேயே முதல் அமைச்சர் அவர்கள் ஆணையிட்டு வழங்கப்பட்டு விட்டது. ஆனால் அந்த விழாக் குழுவினர் நாகபுரியிலிருந்து 3¼ அடி உயரமுள்ள காந்தி அடிகளின் சிலை ஒன்றை வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. விழாக் குழுவினர் செய்கிற தாமதத்தின் காரணமாகத்தான் அந்தச் சிலை திறப்பு விழா இன்னும் நடைபெறவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது.